ஹாய் மை டியர் ஃப்ரண்ட்ஸ்களா! நான் மறுபடியும் உங்கள் ஜோ (ம்..உங்கள் ஜோ ஆகிவிட்டேன்...) பேசுகிறேன்...யாவருக்கும் என் இனிய வந்தனம்...எல்லோரும் நலம் தானே? உங்கள் விமர்சனக்கணைகளை பார்த்து, படித்து, பூரித்து, யோசித்து, ஆராய்ந்த வண்ணம் எழுதுகிறேன் இந்த நன்றி மடலை (ப்பா...ரொம்பவும் செந்தமிழா இருக்குல்லே..கஸ்டப்பட்டு எழுதியிருக்குறேன் கொஞ்சம் பாராட்டுங்கப்பா...) ம்...நீங்க என் நாவலை படிக்க எடுத்துக்கொண்ட ஆவலையும், ஸ்பீடையும் பார்த்து நான் ரொம்பவும் சந்தோசப்படுறேன்... ரொம்ம்ம்ம்ம்பபப நன்றி என் அருமை வாசகர்களே!

இனி நான் மாட்டருக்கு வர்றேன்...முன்னைய ரெண்டு நாவலையும் விட  சிலர் இந்த உருகாதோ உந்தன் உள்ளம் பெட்டர்னும் ரோஹித்தை ரொம்பவும் பிடிச்சிருக்குன்னும் அப்புறம் நாவல் கொஞ்சம் நீளமாக இருந்திச்சுன்னும், இன்னும் சிலர் கிளைமாக்ஸ் வந்து கொஞ்சம் சினிமாத்தனமானதுன்னும் சொல்லியிருந்தீங்க...ஏற்றுக்கொள்கிறேன். அதுக்கு ஏற்ற விளக்கம் பின்வருமாறு :

உருகாதோ உந்தன் உள்ளம் இந்த நாவலின் மெயின் கருவே ஈஹோ தான்...மத்தது எல்லாம் சைடு கருதான்...எதுக்குள்ளேயும் ஈஹோ வரலாம் காதலர்களுக்குள்ளேயோ, காதலுக்குள்ளேயோ, திருமணமான தம்பதிகளுக்குள்ளேயோ வரக்கூடாது...அது தான் கரு... இன்விடேசன் தர வரும் போது மாதங்கி தன் காதலை சொல்லியிருந்தால் ஒரு திரில்லிங் இருந்திருக்காது சப்பென்று முடிந்த மாதிரி தோணியிருக்கும்...அதான் கொஞ்சம் சினிமாத்தனம் கலந்து முடிச்சா எப்படி இருக்குமுன்னு யோசிச்சேன்...அதை விட முதல்லே கிளைமாக்ஸ் எழுதவே இல்லை வாசகர்களிடமே விட்டுவிடலாமா என்று தோணிச்சு..அப்புறம்  அந்த எண்ணத்தை மாற்றி எதிர்பாராத ஒரு கிளைமாக்ஸை போட்டா என்னென்னு இருந்திச்சு.

அடுத்து முக்கியமாக என்னோட நாவல்களை புத்தகமாக பார்த்தவங்களுக்கு மட்டும் தெரிந்த உண்மை ஒன்று அவர்கள் எனது முகவுரையில் படித்திருப்பார்கள். இந்த கதை ஒன்றும் கற்பனைக்கதை இல்லை...இது மட்டுமல்ல எங்கே என் மனம் கூடத்தான் இரண்டும் நிஜ வாழக்கையில் நடந்த சம்பவங்கள் தான். (நம்பினா நம்புங்க...பட் இஸ் இட் ரூ) மலேசியாவில் இருக்கும் என் தோழி ஒருத்திக்கு தெரிந்தவரின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் தான் எங்கே என் மனத்தின் கரு, என் கதையில் கல்யாணம் ஆகி டைவோர்ஸ் கேட்டு ஒரு மாசம் வரை ஒரே வீட்டில் இருந்து பின் நாயகி தன் மனதை தெரிந்து கொள்வாள்...ஆனால் நான் கேள்விபட்டவரோ தன் மழுங்கிப்போன மூளையாலும், பனிமூட்டம் மறைத்த மனதாலும் கல்யாணம் ஆன அடுத்த மாசம் டைவோர்சுக்கு அப்ளை செய்து அதுக்கு பதில் அடுத்த வருசமே கிடைச்சும் சொந்த நாட்டுக்கு திரும்பி போகாமல் ஒரு வீட்டிலேயே கணவன்  ஒருபுறம் மனைவி ஒருபுறமுமாக  ஒரு வருசம் அல்ல மூணு வருசமாக வாழ்ந்தவர்கள்... அவளது கணவனது குணத்தையும் நடத்தையும் பார்த்து புரிந்து கொள்ள அந்த பெண் எடுத்துக்கொண்ட அவகாசம் அது. என் தோழியின் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் பர்மிசனோடு தான் அந்தக்கதை எழுதினேன்..நான் சொன்னது போல ஆம்பிளைங்களிலே பொண்ணுங்களை விட ரொம்ப பொறுமைசாலிங்க நிறைய்ய பேர் இருக்காங்க..(எங்க அட்டாகசத்தை எல்லாம் பொறுத்துக்கொண்டும்)

அப்புறம் வெறும் கற்பனைக்குதிரையிலே பயணம் செய்து நாவலை பெறுவதை விட ஏன் நிஜ சம்பவங்கிளிவே வரும் விஷ யங்களை கருவாகக்கொண்டு எழுதக்கூடாதுன்னு தோணினதுக்கு அப்புறம் என்னோட அடுத்தடுத்த நாவல்களை எல்லாம் நான் கேட்ட பார்த்த நிஜ வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களில் என்னை பாதித்த, யோசிக்க வைத்த விஷயங்களை கருவாக கொண்டு அமைக்க ஆரம்பித்தேன். இந்த உருகாதோ உந்தன் உள்ளம் கூட நான் கேள்விபட்ட சம்பவம் தான்...ஆனா என்ன கிளைமாக்ஸ்சில நீங்க படிச்சது போல இருவரும் நிஜ வாழக்கயில சேரலை...அதிகமான நீயா? நானா?முதலில் இறங்கி வருவது என்ற ஈஹோ போட்டியால்...வந்த விளைவு நாயகிக்கு வேறு யாருடனோ மணமாகி அவள் ஒரு பக்கம் புழுங்கிக்கொண்டு கடனே என்று வாழ்ந்து கொண்டிருப்பதாக கேள்வி, நாயகன் இன்னும் கல்யாணம் ஆகாமலேயே ஏன் அதை பத்தி யோசிக்கமாலேயே இயந்திரமாக அவனது  தொழிலோடு ஒரு இயந்திரமாகிவிட்டான். ம்...என்ன பண்ண? எனக்கு இதைக்கேட்டதும் என்ன வந்தது இவங்களுக்கு? வெறும் ஈஹோ..அதுதானே காரணம்,  மனம் விட்டு எவரும் பேசாததும் ஒரு காரணம், அங்கு கம்யுனீகேஷன் இல்லாமல் போனதும் ஒரு காரணம், வேறு எந்த காரணமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை...விட்டுக்கொடுத்து யாராவது ஒருத்தர் மனம் திறந்திருந்தால்?

என்ன வாசகர்களே நம்புறமாதிரி இருக்கா இல்லையா? இந்த மில்லேனியத்தில எது நடக்கும் எது நடக்காதுன்னு ஒண்ணுமே புரியமாட்டேங்குதுப்பா..காரசாரமானதை விட காது கொடுத்து கேட்க முடியாத அளவுக்கு கூட சம்பவங்கள் எல்லாம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.. அது எல்லாத்தையும் எழுதிட முடியாது ஏன்னா எனக்குன்னு ஒரு ஸ்டைல் இருக்கு..கவுரவம் இருக்கு..அப்படி எழுதி என் கதாபாத்திரங்களை நான் நாறடிக்க விரும்பலை...அப்புறம் நிறைய conversations இருக்குன்னு சொல்லியிருந்தீங்க... சிலருக்கு அது புடிச்சிருக்கு...ஒரு சிலருக்கு புடிக்கலைன்னதும் கேள்விபட்டேன்....நான் என்ன பண்ண? கதையில் அது தேவை..அதைவிட என்னோட ஸ்டைலிலே ஒண்ணு கூட..அதுக்காக எல்லா நாவல்களிலேயும் அந்த ஸ்டைலை எதிர்பார்க்கா தீங்க...ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம்..படிக்கும் போது உங்களுக்கே தெரியும்...ஹீரோ அண்ட் ஹீரோயினுக்கு இடையில் வரும் டயலாக்ஸ் ஸ்டைல் நாங்க பேசுவது தான் (நாங்கன்னா  என்னோட ஃபாமிலி, என் ஹீரோ, என் ஃபெஸட்  ஃபிரண்ட்சுங்க... அவங்க ஃபாமிலி பேசும் ஸ்டைல் எல்லாம் ஜோக்காகத்தான் இருக்கும்...) முதல் ரெண்டு நாவலுக்குள்ள ஒத்துமை அத்தை மகள்–மாமன் மகன் உறவு என்று குறிப்பிட்டிருந்தீங்க அடுத்து எழுதிய நாவல்கள் எல்லாம் கருவிலேயும் சரி...பாத்திரங்கள் கூட வித்யாசமானது தான்...(என்ன வெள்ளி பாத்திரம், இரும்பு பாத்திரம், பழைய பித்தளை பாத்திரமான்னு கேட்டு என்னை கடிச்சு குதறவேண்டாம்...)

அப்புறம் முக்கியமாக என்னை யோசிக்க வைத்த விசயம் ஒண்ணு என்னென்னா.. என்னோட எந்த நாவல்களையும் எவர்

படிச்சாலும்  திரும்ப திரும்ப சொல்வது ஒண்ணுதான் ஜோ உங்க நாவல்கள் மட்டும் தான் எத்தனை தடவை திரும்ப திரும்ப படிச்சாலும் எங்களுக்கு அலுப்பதுமில்லை... சலிப்பதுமில்லை...ஒவ்வொரு தடவையும் எங்களையுமறியாமல் எங்கள் உதட்டிலும் முகத்திலும் புன்னகை பூக்க வைக்கும் திறமை உங்கள் நாவலுக்கும், உங்கள் எழுத்துக்கும் உண்டு...அது எப்படி? என்று என்னை பலபேர் கேட்டுருக்கிறார்கள்...அதை மட்டுமே கேட்ட எனக்கு புதுசா..ஒரு வாசகி சொன்னது தான் என்னை மிகவும் யோசிக்க வைத்தது...அவங்க சொன்னது  இதுதான்...எனது நாவல்கிளில்  பக்கங்களை தட்டிக்கழித்துவிட்டு (ஸ்கிப்) அடுத்தடுத்த பக்கங்களுக்கு தாவிக்கொண்டு போனதாகவும்...ஓவரான விபரணை என்றும்  சொல்லியிருந்தாங்க...அவங்களுக்கான பதில் இது...முக்கியமாக எனது நாவல்களை படிக்கும் வாசகர்களுக்கு சலிப்போ, அலுப்போ தட்டக்கூடாது...நாவல்களே பொழுது போகத்தானே தவிர அதுவே போரடிக்கும் விசயமாக இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருப்பேன்.. ஏன் நானே கூட அப்படி போரடிக்கும்படியான நாவலை எழுத முனைய மாட்டேன் எனது நேரத்தையும், உழைப்பையும் வீணடிச்சு ஒரு பேராடிக்கும்படியான நாவலை கனவிலே கூட  நினைச்சுப் பார்க்கமாட்டேன்...ஒவ்வொரு வசனத்தையும், ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் வெகு சிரத்தை எடுத்து பலவழிகளில் ஆராய்ந்து, கொஞ்சமாவது   வாசகர்கள் ஏற்றுக்கொள்ளும்படி இருக்க வேண்டும் என்று யோசித்து நாவலாக  வெளியிடும் முன்பு பத்துக்கு பதினைந்து தடவை திரும்ப திரும்ப படித்து எனக்கு திருப்தியான பின் வெளியிடுவேன்... பல நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படித்துவிட்டார்கள்.. அதிலே ஒருத்தர் மட்டும் அப்படி சொன்னது தான் என்னை யோசிக்க வைக்குது.. என்னை மறுபடியும் யோசிக்க வைத்த அந்த வாசகிக்கு ரொம்ப நன்றி...என்றும் எனக்கு நல்ல விமர்சனங்கள் டானிக் மாதிரிதான்.

கதைக்கு தேவை எனும் பொழுது விபரணை எழுதவேண்டும் இல்லை எனில் அது முழுமையான  கதையாக இருக்க வாய்ப்பில்லை. அப்புறம் முக்கியமாக பலர் எனது நாவலை பிரதி எடுக்க முனைவதும், தமக்கு தெரிந்த வெப்சைடில் இணைப்பதும், தெரிந்த நண்பர்களுக்கு அனுப்புவதுமாக இருக்குறார்கள் என்று தெரிய வந்துள்ளது...வார்னிங் செய்தும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை..ஆகவே முதலில் அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதா? இல்லை போனால் போகட்டும் என்று கருணை காட்டுவதா என்று யோசித்துக் கொண்டிருக்குறேன்...எனது வக்கீல் என்ன சொல்கிறார் என்று பார்த்துவிட்டு  மேலதிக நடவடிக்கைகளை பார்க்கலாம்...அதனால் தான் எனது அடுத்தடுத்த நாவல்களை ரம்யாவின் வெப்சைடில் தருவதுக்கு இப்பொழுது உடன்பாடு இல்லை...அவை அத்தனையும் ஹிட்ஸ் முன்னைய நாவல்களுக்கு இருந்த வரவேற்பை விட அதுக்கு பின் வந்தவைகளுக்கு பலமான வரவேற்பை பார்த்துவிட்டும், என் தோழிங்களின் விடாத பராட்டு மழையையும், வேண்டுகோளையும் கருத்தில் கொண்டு பப்ளிஷ் பண்றதைப்பத்தி திங்க் பண்ணா என்னென்னு இருக்கு...ஆகவே என் இனிய வாசக நெஞ்சங்களே...கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்க...

நீங்க எனக்கு தந்த பாராட்டுக்கும், ஊக்கத்துக்கும், அழாகன விமர்சனங்களுக்கும், ரம்யாவுக்கும் என் பணிவார்ந்த அன்பு கலந்த நன்றிகள்...மீண்டும் சந்திக்கும் வரை தற்காலிகமாக உங்ககிடமிருந்து விடை பெறுகிறேன்..

என்றும் அன்புடன்
உங்கள் எஸ்.ஜோ

